சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்
**EP.No. 19 / 2022**
**in**
**OS.No.190/2011**

ம.சா.3. முனியப்பன் 03.09.2024

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் ராமபட்டினபுதுாரில் வசித்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. மனுதாரர் அழைத்ததால் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மனுதாரரும் எதிர்மனுதாரரும் எனக்கு உறவினரா என்றால் இல்லை. அவர்களது நிலம் எங்கள் தோட்டத்திற்கு பக்கம் தான் உள்ளது. நான் எனது மனுவில் 5 வருடங்களாக விவசாயம் செய்யவில்லை என்று சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. எனக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே பகை உண்டா என்றால் இல்லை. தாவா பாதையின் சர்வே எண்.335 ஆகும். நீதிமன்ற ஆணையர் வந்து தாவா பாதையை பார்த்த போது நான் உடன் இல்லை. காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகாரில் நான் சாட்சியாக எதுவும் கையெழுத்து செய்துள்ளேனா என்றால் இல்லை. 27.02.2024-ம் தேதி மாலை 03.00 மணியளவில் முனியப்பன் வகையறா பாதையில் வரக்கூடாது என்று எதிர்மனுதாரர் தடுத்தார்கள் என்று சொல்லியுள்ளேன். அப்போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. அப்போது நான் அந்த இடத்தில் இல்லை என்றும்நான் வேறு ஒரு இடத்தில் வேலை செய்து கொண்டு இருந்தேன் என்றும் வழக்கிற்காக நான்அந்த இடத்தில் இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையிலேயே எங்கள் தோட்டத்தில் நான் வேலை செய்து கொண்டிருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சத்தம் கேட்டு தான் நான் அங்கு சென்றேன். நான் சொல்வது போல் எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றும் மனுதாரருக்காக நடக்காத சம்பவத்தை நடந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சம்பவம் நடந்தது உண்மையாக இருந்திருந்தால் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றும் அவ்வாறு எடுக்காததால் தான் நான் சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. நான் சென்று எதிர்மனுதாரரிடம் சமாதானம் செய்ததாகவும் நீதிமன்ற உத்தரவு எங்களை எதுவும் செய்துவிடமுடியாது என்று நான் எனது பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ளது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. எனக்கு காதும் கேட்காது, சரியாக எனக்கு பார்வையும் தெரியாது என்றும் நடக்காத சம்பவத்தை நடந்ததாக கற்பனையாக மனுதாரருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரர் மீது கால்புணர்ச்சி, வன்மம்

காரணமாக மனுதாரருடன் சேர்ந்து கொண்டு அவருக்கு ஆதரவாக உண்மைக்கு புறம்பான சம்பவத்தை சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு அந்த பாதையில் பாத்தியம் இல்லை. எனது சாட்சியம் முன்னுக்கு பின் முரணாக இருப்பதால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ள சாட்சியம் அல்லது நம்பத்தகுந்த சாட்சியம் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2024.09.04 10:33:47 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்